கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com



ஞானம் 5 - ஒலி 35 | 28-08-2022



# இரை தரும் இறை

தலையங்கம்



# புகழுக்கு ஏங்கும் பிச்சைக்காரன்கள்



அருட்பணி. **சைமன் பீட்டர்**

இயேசு கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமான அன்பு சகோதர, சகோதரிகளே வணக்கம். பிலிப்பியர் 4:19ம் வசனம் கூறுவதுபோல,

என் கடவுள் கிறிஸ்து இயேசுவின் வழியாய் தம் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வாராக

என்று உங்களை நான் வாழ்த்துகின்றேன்.

எல்லாம் நிறைவாக இருக்கின்றபோது, அதற்குக் காரணமான எதையும் மனித மனம் பெரியதாக நினைக்காது. நன்றியுணர்வு சிறிதும் இருக்காது. ஆனால், நன்றியைப்போல ஒரு தெய்வீகக் குணம் இவ்வுலகில் எதுவும் இல்லை என்று நமது முன்னோர்கள் நமக்குக் கற்றுத் தந்திருக்கின்றார்கள்.

***நன்றி மறப்பது நன்றன்று***

என்று நம் வள்ளுவப் பெருந்தகையும் சொல்லியுள்ளார்கள்.

அனைத்துக்கும் காரணமாக இருப்பவர் கடவுள் என்பது நம் ஆன்மீக பால பாடம். இறைவனைப்பற்றிய ஆறு இலட்சணங்களில் இதுவும் ஒன்று.

நாம் உயிர் வாழ்வதும், அதற்குக் காரணமான ஒவ்வொரு உயிர் மூச்சும், சாப்பிடும் ஒவ்வொரு பருக்கையும், தண்ணீரும், நம்மோடு வாழும் சக மனிதரும், காலத்தின் ஒவ்வொரு நிமிடமும், நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் இறைவனின் அருட்கொடை.

என்னைவிட்டுப் பிரிந்து
உங்களால் எதுவும் செய்ய இயலாது.
- யோவான் 15:5

என்று இயேசு கூறியதன் பின்னால் மிகப்பெரிய சார்பியல் தத்துவம் உண்டு.

அதாவது, அவனின்றி ஓரணுவும் அசையாது என்பதை வலியுறுத்துகின்றது.

புனித ஜான்போஸ்கோ அவர்கள் நடத்திய இல்லத்தில் ஏராளமான அனாதைக் குழந்தைகள் வளர்ந்து வந்தார்கள். அவர்களின் கல்வி, தங்குமிடம், உணவு, அனைத்தையும் அவர்களுக்கு அவர் இலவசமாக வழங்கி வந்தார். அவ்வளவு பெரிய பொறுப்பை இறைவனின் அளவில்லாத கருணையை நம்பியே நடத்தி வந்தார்.

ஒருமுறை குழந்தைகளுக்கு கொடுக்க உணவு இல்லை என்று பணியாளர் ஒருவர் நம் புனிதரிடம் கூறினார். அவற்றை வாங்குவதற்கும் அவரிடம் பணமும் இல்லை. ஆனால், அவர் தன் பணியாளரிடம், கவலைப்படாதீர்கள், இறைவன் நமக்கு நிச்சயமாக உணவு வழங்குவார் என்று சொல்லிவிட்டு இறைவனிடம் செபிக்க ஆரம்பித்தார். குழந்தைகள் அனைவரும் பசியால் வாடினார்கள். நம் புனிதர் நம்பியபடியே, அன்று மாலை ஒருவர் அந்த இல்லத்திற்கு வந்து அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கினார். இவ்வாறு நடந்தது



ஒருமுறை மட்டுமல்ல, மாறாக அவரின் வாழ்நாள் முழுவதும், அவர் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையால் மட்டுமே அனைத்தையும் சிறப்பாக செய்து வந்தார். இறைவனும் அவரை ஒருபோதும் கைவிட்டதில்லை.

நம்பினார் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு

என்று எல்லா மதமும் அதைத்தான் வலியுறுத்துகின்றன.

ஒருமுறை ஓர் அரசன் ஒரு வீதி வழியே சென்று கொண்டிருந்த போது வழியோரம் ஒரு பிச்சைக்காரர், இறைவனின் பெயரைச் சொல்லி பிச்சை கேட்டார். அரசன் அவருக்கு ஒரு வெள்ளிக் காசைக் கொடுத்துவிட்டு. நான்தானே உனக்கு பிச்சை போட்டேன், பிறகு, எதற்கு இறைவனின் பெயரைச் சொல்லி பிச்கை கேட்கிறாய் என்றான். அதற்கு அந்தப் பிச்கைக்காரர், அரசே, என்னதான் நீங்கள் பிச்சை போட்டாலும், இன்று எனக்கு இந்த வெள்ளிக் காசைக் கொடுக்க இறைவனே உங்களை இந்த வழியாக அனுப்பியுள்ளார் என்றான்.

அரசன் வேறு ஒரு வீதி வழியாக சென்றபோது, அங்கும் ஒரு பிச்சைக்காரர், அரசனை பார்த்து அவரை வாழ்த்தி பிச்சை கேட்டார். அவனுக்கும் ஒரு வெள்ளிக் காரை கொடுத்துவிட்டு, உனக்கு இந்த வெள்ளிக் காசு கொடுத்தது அரசகனாகிய நானா? இல்லை கடவுளா? என்று கேட்டார். அதற்கு அந்தப் பிச்கைக்காரர், அரசே, நீங்களே எங்களுக்கு படியளக்கும் மஹாராஜன். நீங்கள்தான் எங்கள் அரசர், வாழவைக்கும். நீங்கள் தான் தர்ம பிரபு, அந்தக் கடவுளல்ல என்று அரசனைப் புகழ்ந்து தள்ளினான். அவனுக்கு அரசன் மேலும் ஒரு வெள்ளிக் காசை கொடுத்துவிட்டு தன் அரண்மனைக்கு திரும்பிச் சென்றான்.

அந்த முதல் பிச்சைக்காரன், தன்னை வாழ வைப்பது கடவுள்தான் அரசன் அல்ல என்று கூறியது அரசனை மிகவும் வேதனைப்படுத்தியது. ஆகவே, கடவுளைவிட, படியளக்கும் அரசன் நினைத்தால் யாரையும் செல்வராக்கலாம் என்பதை நிரூபிக்க நினைத்தான்.

மக்கள் அனைவருக்கும் ஒரு விருந்து வைத்தான். அப்போது அந்த இரண்டு பிச்சைக்காரர்களும் அந்த விருந்துக்கு வந்தார்கள். வயிறார உண்டார்கள். வந்தவர்கள் அனைவருக்கும் இரண்டு வெள்ளிக்காசுகளையும், ஒரு பரங்கிக்காயையும் கொடுத்தனுப்பினான். அனைவரும் மகிழ்ச்சியோடு அவற்றைப் பெற்றுச் சென்றார்கள்.

அரசன் ஒரு சூழ்ச்சி செய்தான். அதன்படி, இறைவனின் பெயரைச் சொல்லி பிச்சை எடுத்தவனுக்கு எல்லோருக்கும் கொடுத்ததுபோல இரண்டு வெள்ளிக் காசுகள், மற்றும் ஒரு பரங்கிக்காயைக் கொடுத்தார். ஆனால், அரசனைப் புகழ்ந்து பிச்சை எடுத்தானே, அவனை எப்படியாவது பெரிய செல்வந்தனாக்கி, அரசனே வாழ வைக்கும் தெய்வம் என்று நிரூபிக்க வேண்டும் என்பதற்காக, அவனுக்கு இரண்டு வெள்ளிக் காசுகைளையும், ஏற்கனெவே ஒரு பரங்கிக்காயில் ஓட்டை போட்டு அதனுள் தங்கம், வைரம் பேன்றவற்றை நிரப்பி வைத்திருந்தார், அதையும் அவனுக்கு கொடுத்தனுப்பினார். அந்த இரண்டு பிச்சைக்காரர்களும் மகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த அரசன், மீண்டும் அந்த வீதி வழியாகச் சென்றபோது, அரசனைப் புகழ்ந்து பிச்சை எடுத்தவன், அதே இடத்தில் அழுக்கு உடையோடு அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். அரசனுக்கு அதிர்ச்சி, அவனுக்குத்தானே, தங்கம், வைரம் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் நிறைந்த பரங்கிக்காயைக் கொடுத்தோம், பிறகு அவன் ஏன் இப்படி மீண்டும் பிச்சைக்காரனாகவே இருக்கிறான் என்று அரசன் குழம்பினான்.

அரசன் அந்தப் பிச்சைக்காரனைப் பாரத்து, ஏம்ப்பா, நான் அனைவருக்கும் விருந்து வைத்தபோது, உனக்கு இரண்டு வெள்ளிக் காசுகளையும், ஒரு பரங்கிக் காயையும்

கொடுத்தேனே, அதை என்ன செய்தாய் என்று கேட்டார். அதற்கு அவன், அரசே, நான் ஒண்டிக்கட்டை, குடும்பம், பிள்ள குட்டிகள், வீடு வாசல் எதுவும் எனக்கு கிடையாது, நான் சமைப்பதும் இல்லை. அப்படியிருக்க அந்தப் பரங்கிக் காயை வைத்து என்ன செய்ய முடியும் என்று நினைத்து, அதை ஒருவருக்கு ஐந்து வெள்ளிக் காசுக்கு விற்று விட்டேன் என்றான்.

அதற்கு, அந்த அரசன், அட ஞான சூன்யமே, நீ பண்காரனா மாத்தனும்னு அந்தப் பரங்கிக்காயில் நான் தங்கம், வைரமெல்லாம் நிறைத்துக் உனக்குக் கொடுத்தேன். அதை உடைத்துப் பார்த்திருந்தால், இப்போது நீ பெரும் செல்வந்தனாய் இருந்திருப்பாயே என்று அவனை நினைத்து. ஜென்மப் புத்தி செருப்புல அடிச்சாலும் போகாது னு சொல்லறது உண்மைதானோ? என்று நினைத்துவிட்டு அங்கிருந்து அரசன் போய்விட்டார்.

அரசன் வேறு ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்த போது, இறைவனின் பெயரைச் சொல்லி பிச்சை எடுத்தவன், விலையுயர்ந்த உடையுடுத்தி, ஒரு பெரிய வீட்டின் முன் நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவனைக் கண்டதும் அரசன் அவன் பக்கத்தில் சென்று, நீ அன்று இறைவன் பெயரைச் சொல்லி பிச்சை எடுத்தவன்தானே என்று கேட்டார். ஆமாம் அரசே, அன்று நான் ஒரு பிச்சைக்காரனாய் இருந்தேன், ஆனால் கடவுள் இன்று என்னை மிகப்பெரிய செல்வந்தனாக மாற்றிவிட்டார். இதோ இந்த பங்களாவை நேற்றுதான் புதிதாக வாங்கினேன். நானும் என் குடும்பமும் இன்று நன்றாக வாழ்வதற்கு அந்த இறைவனே காரணம். நான் நம்பிய கடவுள் என்னைக் கைவிடவில்லை என்றான்.

அப்போது அந்த அரசன், அது சரி நீயோ பிச்சைக் காரன், ஆனால், இந்த செல்வம், வசதி உனக்கு எப்படி வந்தது? என்று கேட்டார். அதற்கு அவன். அரசே நீங்கள் அன்று கொடுத்த விருந்து சமயத்தில் எனக்கும், மற்றொரு பிச்சைக்காரனுக்கும் தலா இரண்டு வெள்ளிக்காசுகளையும், ஒரு பரங்கிக் காயையும் கொடுத்தீர்கள். அந்தப் பிச்சைக்காரன், தான் ஒரு அனாதை, வீடு வாசல் கிடையாது, அதனால் அந்தப் பரங்கிக்காய் தனக்கு வேண்டாம் என்று சொல்லி, அதை ஐந்து வெள்ளிக் காசுகளுக்கு என்னிடம் விற்றுவிட்டான். அதை வீட்டிற்குக் கொண்டுவந்து என் மனைவிடம் கொடுத்து சமைக்கச் சொன்னேன். அதை உடைத்த பொழுது, அதில் நிறைய தங்கம், வைரம் இருந்தது. கடவுள் கண் திறந்துவிட்டார், அவர் எப்போதும் எங்களைக் கைவிடுவதில்லை. கடவுள் தன்னை எப்போதும் நம்பியிருப்பவர்களை ஏற்ற காலத்தில் காப்பாற்றுவார் என்று நானும், என் மனைவியும், குடும்பமும் நம்பியிருந்தோம். இன்று நாங்க வீடு வாசல்னு நல்லா இருக்குறோம்னா அதுக்கு அந்தக் கடவுள்தான் காரணம் என்றான்.

அரசன், தனது தவறை உணர்ந்து, மனித, சூழ்ச்சிகளையும், கடவுள் தனக்கு சாதகமாக மாற்றி தன்னை நம்புகிறவர்களுக்கு அதை வழங்குகின்றார் என்று உணர்ந்து கடவுளை நம்ப ஆரம்பித்தார், தனது தலைக்கணத்தையும் அகற்றிவிட்டார்.

அதைத்தான் புனித பேதுரு தனது முதல் திருமுகம் 5ம் அதிகாரம், 6 முதல் 11ம் வசனங்களில் இவ்வாறு கூறுகின்றார்.

ஆகையால் கடவுளுடைய வல்லமைமிக்க கரத்தின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள். அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்துவார்.

உங்கள் கவலைகளையெல்லாம்
அவரிடம் விட்டுவிடுங்கள்.
ஏனெனில் அவர் உங்கள் மேல்
கவலை கொண்டுள்ளார்.
அறிவுத் தெளிவோடு
விழிப்பாயிருங்கள்.
உங்கள் எதிரியாகிய அலகை
யஸரை விழுங்கலாமெனக்
கர்ச்சிக்கும் சிங்கம்போலத்
தேடித் திரிகிறது.

அசையாத நம்பிக்கை
கொண்டவர்களாய்
அதனை எதிர்த்து நில்லுங்கள்.
உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதரர்
சகோதரிகள் உங்களைப் போலவே
துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள்
என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா?

எல்லா அருளும் நிறைந்த கடவுள்,
இயேசு கிறிஸ்துவுக்குள்
என்றும் நிலைக்கும் தம் மாட்சியில் பங்குகொள்ள
உங்களை அழைத்திருக்கிறார்.
சிறிது காலத் துன்பங்களக்குப்பின்
அவர் உங்களை சீர்படுத்தி,
உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி நிலைநிறுத்துவார்.

அவரது வல்லமை
என்றென்றைக்கும் உள்ளது.

– ஆமென்.



# விவிலியம் அறிவோம் – 53



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## விடுதலைப் பயணம் நூல் வரலாற்று நூலா?

கடவுள் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து நானூறு ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன. ஆபிரகாமின் வழிவந்தவர்களுள் ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன் கடவுள் உறவுகொண்டு அவர்களை வழிநடத்துவதை தொடக்கநூலில் பார்க்கிறோம். யாக்கோபிற்குப் பிறகு அவருடைய புதல்வர்களுடன் கடவுள் அவ்வாறு உறவுகொண்டு வாழ்வது தெரியவில்லை. யாக்கோபின் புதல்வர்கள் அவர்கள் மூதாதையர்களின் கடவுளை அறிந்தவர்களாக இருக்கின்றார்களா என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. அவர்களுடைய வாழ்வில் கடவுள் எதிர்மறையாகத்தான் செயல்படுகின்றார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன் செயல்பட்டதைப் போல நேரடியாகச் செயல்படுவதை பார்க்கமுடியவில்லை. யாக்கோபும் அவருடைய புதல்வர்களும் எகிப்திற்குச் சென்று குடியேறிய பிறகு தங்கள் மூதாதையரின் கடவுளோடு தொடர்பில் இருந்ததுபோல் தெரியவில்லை. எகிப்திலிருந்து கடவுள் அவர்களை வெளியே கொண்டுவரும் போதுதான் அவரை அவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

கடவுளின் இந்த அமைதியும், இஸ்ரயேல் மக்களின் அடிமைத்தனமும் கடவுளின் திட்டத்தோடு இணைந்தவைதான். கடவுள் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தபோது கூறிய வார்த்தைகள் இதை உறுதி செய்கின்றன. நீ உறுதியாக தெரிந்து கொள்ள வேண்டியது; உன் வழிமரபினர் வேறொரு நாட்டிற்குப் பிழைக்கச் செல்வர். அங்கே அவர்கள் நானூறு ஆண்டுகளாகக் கொடுமைப்படுத்தப்படுவர். அவர்கள் அடிமைவேலை செய்யும் நாட்டிற்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்குவேன். அதற்குப்பின் மிகுந்த செல்வங்களுடன் அந்நாட்டைவிட்டு அவர்கள் வெளியேறுவர். நான்காம் தலைமுறையில் அவர்கள் இங்கே திரும்பிவருவர் (தொநூ 15:13-14, 16) எனக் கூறுகின்றார். கடவுளின் திட்டப்படி காலம் நிறைவுற்றபோது கடவுள் அவர்களை கண்ணோக்குகிறார். அவர்களுக்கு விடுதலைப் பெற்றுத்தர இறங்கிவருகிறார். மோசே என்ற




மனிதரைத் தயாரித்து அவர் வழியாக இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்கிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி அவர்களை நடத்திச் செல்கிறார். இந்த நிகழ்வுகளையெல்லாம் நாம் வாசிக்கும்போது இந்த நிகழ்வுகள் அனைத்தும் வரலாற்று நிகழ்வுகளா? என்ற கேள்வி எழுகிறது. விவிலியத்தில் மட்டும்தான் விடுதலைப் பயண நிகழ்வுகளை நாம் வாசிக்கிறோம். பண்டையகால எகிப்திய ஆவணங்கள் இஸ்ரயேல் மக்களின் இந்த விடுதலைப் பயணத்தைப் பற்றி எதையும் குறிப்பிடவில்லை. உதாரணமாக, மோசே பார்வோனை எதிர்கொள்கின்ற நிகழ்வுகள், பெருந்துன்பங்கள் பற்றிய செய்திகள் எதுவும் எகிப்திய ஆவணங்களில் இல்லை. பொதுவாக எகிப்திய ஆவணங்கள் பார்வோன்களையும் எகிப்திய தெய்வங்களையும் மகிமைப் படுத்துவதற்காக எழுதப்பட்டவை.

எகிப்தியர்களைப் பொறுத்தவரை இஸ்ரயேல் மக்களோடு தொடர்புடைய நிகழ்வுகள் முக்கியமானவை அல்ல. அரசர்களான தாவீது மற்றும் சாலமோன் காலத்திற்கு முன்னால் ஒரேயொரு முறைதான் இஸ்ரயேலைப் பற்றிய குறிப்பு எகிப்திய ஆவணங்களில் வருகிறது. விவிலியத்தைத் தவிர வேறு ஆதாரங்கள் இல்லையென்றாலும் விடுதலைப் பயண நிகழ்வுகள் வரலாற்று நிகழ்வுகள் இல்லையெனக் கூறமுடியாது. சான்றுகள் இல்லையென்பது அப்படியொன்று

நிகழவில்லை என்பதற்கு சான்றாகாது. எகிப்திய ஆவணங்களில் பதிவு செய்யப்படவில்லையென்றாலும் விடுதலைப் பயண நிகழ்வுகள் நடந்ததற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன. உதாரணமாக, பல விவிலிய அறிஞர்கள் விடுதலைப் பயணம் நூலில் வருகின்ற மோசே, ஆரோன், கூஃஷி, மெராரி மற்றும் பினகாசு போன்ற பெயர்கள் எபிரேயப் பெயர்கள் அல்ல மாறாக எகிப்திய பெயர்கள் என்கின்றனர். மோசே என்ற பெயர் தூட்மோசே என்ற பார்வோனின் பெயருடன் தொடர்புடையது. இதன் பொருள் தூட் என்ற கடவுள் பிறந்துள்ளார் என்பதாகும். இஸ்ரயேலின் வரலாற்றில் எகிப்தியக் கலாச்சாரத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்திருந்தால் இஸ்ரயேலில் இந்தப் பெயர்கள் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. இரண்டாவதாக, விடுதலைப் பயண நிகழ்வுகள் கட்டுக்கதைகளாக இருக்க வாய்ப்பில்லை; ஏனெனில் எந்த ஒரு சமூகமும் தங்கள் தோற்றம் அடிமைத்தனத்திலிருந்து வருகிறது என்பதைக் கட்டுக்கதையாகக் கூறுவதற்கு விரும்பமாட்டார்கள். இந்தக் காரணங்களால் ஒரு சில அறிஞர்கள் விடுதலைப் பயண நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதைப்போல நடக்கவில்லையென்றாலும் அவை வரலாற்று நிகழ்வுகளே அல்ல எனக் கூறமுடியாது என்கின்றனர்.

விடுதலைப் பயண நிகழ்வுகள் பற்றிய அறிஞர்களின் சந்தேகங்கள் வரலாறு பற்றிய ஆய்வை நேர்மையுடன் செய்வதற்கு வழிவகுத்தன. நமது கைகளில் தவளுகின்ற விடுதலைப் பயணம் நூல், அதில் காணப்படும் நிகழ்வுகள் நடந்ததாகக் கூறப்படும் காலத்தில் எழுதப்பட்டதல்ல; மாறாக, பலநூறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் எழுதப்பட்டது. எனவே, இந்த நிகழ்வுகள் உண்மையாகவே வரலாற்றில் நடந்த நிகழ்வுகளா? விவிலியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதைப் போல நடந்தனவா? போன்ற கேள்விகளுக்கான விடைகளை விவிலியப் பதிவுகளிலிருந்து அறிந்துகொள்வது கடினம். மேலும் விவிலியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தரவுகளிலும் சில குளறுபடிகள் உள்ளன. உதாரணமாக, விடுதலைப் பயணத்தின் போது எகிப்திலிருந்து வெளியே வந்தவர்கள், குழந்தைகள் தவிர நடந்து செல்லக்கூடிய ஆடவர் மட்டும் ஏறத்தாழ ஆறு லட்சம் பேர் எனக் கூறப்படுகிறது. அவர்களோடு, பல இனப் பெருந்திரளும் புறப்பட்டு வந்தனர் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது (விப 12:37-38).ஆனால் எண் 1:46 இன் படி மொத்தம் எண்ணப்பட்டோர் ஆறு இலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்றைம்பது பேர், மற்றும் எண் 26:52 இன் படி இஸ்ரயேலின் ஆண் மக்கள் தொகை ஆறு லட்சத்து ஓராயிரத்து எழுநூற்று முப்பது எனக் கூறப்படுகிறது. இந்த எண்ணிக்கைகள் உண்மையானவையா? மிகைப்படுத்தப்பட்டவையா?



பெரும்பாலான அறிஞர்கள் இந்த எண்களை மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகவே பார்க்கின்றனர்.

இரண்டாவதாக, இஸ்ரயேல் உலர்ந்த தரையில் நடந்து செல்வதற்காக கடவுள் செங்கடலை இரண்டாகப் பிரித்தார் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மோசே தம் கையைக் கடல்மேல் நீட்டவே, ஆண்டவர் கீழைக் காற்றை இரவு முழுவதும் வன்மையாக வீசச்செய்து கடலைப் பின்வாங்க வைத்து உலர்ந்த தரையாக்கினார். நீர்த்திரள் பிரிக்கப்பட்டது. வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் உள்ள நீர்த்திரள் அவர்களுக்குச் சுவராக விளங்க இஸ்ரயேல் மக்கள் கடல்நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர் (விப 14:21-22). உண்மையாகவே கடல் இரண்டாகப் பிரிந்ததா? நீர்த்திரள் பிரிந்து சுவராக விளங்கியதா? அல்லது இயற்கையாகவே நிகழ்ந்த ஒரு நிகழ்வு கடவுளின் ஆற்றலால் நிகழ்ந்ததாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதா? விடுதலைப் பயணம் ஒரே தடவையாக நடந்த பயணமா? அல்லது மக்கள் பல நேரங்களில் பயணித்தார்களா? எகிப்திய ஆவணங்களில் ஆசியாவைச் சேர்ந்த நாடுகளிலிருந்து பிழைப்புதேடி ஏராளமான ஏழை மக்கள் எகிப்து நாட்டிற்கு புலம்பெயர்ந்து வாழ்வது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு புலம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் எகிப்தின் எல்லையோரங்களில் வாழ்ந்து வந்தார்கள். இஸ்ரயேல் மக்களும் அவ்வாறு வாழ்ந்தவர்களாக இருக்கலாம். இவ்வாறு வாழ்ந்த மக்கள் மோசேயின் தலைமையின்கீழ் ஒன்றிணைந்து வெளியேறியிருக்கலாம் என்பது ஒரு சில அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது. இதை உண்மையென்று ஏற்றுக்கொள்ள முடியுமா? விடுதலைப் பயணத்தை வழி நடத்திய கடவுள் யார்? இஸ்ரயேலின் கடவுள் என அறியப்பட்ட யாவே கடவுளா? அல்லது மேற்காசிய நாடுகளில் பலராலும் தலைமைக் கடவுள் என அறியப்பட்ட எல் என்ற கடவுளா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடைகள் கிடைப்பது கடினம். விவிலியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிகழ்வுகளின் படி விடுதலைப் பயணம் ஒரு தடவைதான் நிகழ்ந்தது. அதை நிகழச் செய்தவர் இஸ்ரயேலின் கடவுள் என அறியப்பட்ட யாவே கடவுள் என்பதுதான் நமது நம்பிக்கை. மக்களின் நம்பிக்கைதான் விவிலிய நூல்களின் ஆதாரம். எனவே தொடக்கநூலைப் போல விடுதலைப் பயணம் நூலும் வரலாறும் நம்பிக்கையும் கலந்த ஒரு கலவை என்று கூறலாம். மேலும் இந்நூலில் பாரம்பரியக் கதைகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. உதாரணமாக மோசே நைல் நதியில் கோரைப்புல் பேழையில் கண்டெடுக்கப்பட்டதைக் கூறலாம். இந்தக் கதை கி.மு. 3000 ஆண்டளவில்; வாழ்ந்த அக்காதிய அரசனான முதலாம் சார்கோன் மன்னனின் கதைக்கு ஒத்ததாக உள்ளது. ஒரு சில மிகைப்படுத்தல்களும் விடுதலைப் பயணம் நூலில் உள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. கடவுள் மோசே மற்றும் ஆரோன் வழியாகச் செய்த அடையாளங்களும் அருஞ்செயல்களும் மற்றும் விடுதலை நிகழ்வுகளும் மிகைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன என்பதில் சந்தேகமில்லை. எகிப்திலிருந்து வெளியேறியதாகக் கூறப்படும் இஸ்ரயேலர்களின் எண்ணிக்கையும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றுதான்.

இன்னும் இஸ்ரயேலின் பன்னிரு குலத்தவரும் எகிப்திற்குச் சென்று வாழ்ந்தார்கள் என்பதும் சந்தேகத்திற்குரியதே. அதற்கு மாறாக கானானில் பஞ்சம் ஏற்பட்டபோது அவர்களில் ஒருசிலர் எகிப்திற்குச் சென்றிருக்கலாம். யாக்கோபு எகிப்தில் யோசேப்பின் பிள்ளைகளான மனாசே மற்றும் எப்பிராயீமை தன்னுடைய புதல்வர்களாக ஏற்றுக்கொள்வது (தொநூ 48:5-6) எகிப்துடன் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. இஸ்ரயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டிற்குள் அழைத்துச் செல்லும் யோசுவா எப்பிராயீம் குலத்தைச் சார்ந்தவர். மோசேயின் குலமான லேவியர் குலமும் எகிப்தில் வாழ்ந்திருக்கலாம். ஆனால் விவிலியம் பொதுவான ஒரு சித்திரத்தை வரைகிறது. விடுதலைப் பயணத்தைப் பற்றிய நிகழ்வுகளையும் வேறுபட்ட மரபுகள் வேறுபட்ட விதங்களில் கூறுகின்றன. ஆனாலும் வரலாற்று உண்மைகளை மறுக்க முடியாது.

ஒன்றை மட்டும் உறுதியாக கூறியாக வேண்டும். இந்நூலின் கருத்துக் கோர்வையிலும், கட்டமைப்பிலும், உள்ளடக்கத்திலும் இறையியல் முக்கியத்துவம் வகிக்கிறது. இந்நூலை வாசித்துப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் நம்பிக்கை வேண்டும். ஏனெனில் இந்நூல் நம்பிக்கையை வளர்ப்பதற்காக, கடவுளில் நம்பிக்கை கொண்டவர்களால் எழுதப்பட்ட நூல். கடவுளில் நம்பிக்கை இல்லாதவர்கள் இந்நூலின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது. விடுதலைப் பயணம் கதை தொடர்ந்து மக்களுக்கு உத்வேகத்தைக் கொடுக்கிறது. உலக முழுவதிலும் மற்றும் இஸ்ரயேல் நாட்டிலும் வாழ்கின்ற யூதச் சமூகங்களுக்கு விடுதலைப் பயண நிகழ்வுகளைக் கொண்டாடும் பாஸ்கா விழா பெரிய விழா. கொண்டாட்ட நாள். விடுமுறை நாள். பாஸ்கா விழாவின் போது அவர்கள் உண்ணுகின்ற பாஸ்கா விருந்தில் யூதக் குடும்பங்களில் விடுதலைப் பயணம், குறிப்பாக கடவுள் எவ்வாறு அடிமைகளாக எகிப்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களை விடுவித்து வெளியே அழைத்து வந்தார் மற்றும் அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார் என்பது நினைவூட்டப்படுகிறது. விடுதலைப் பயணம் கதை யூதர்களின் வாழ்க்கையில் புதிய உத்வேகத்தையும் யூதர்கள் ஒடுக்கப்பட்ட சூழ்நிலைகளில் செயல்பாட்டிற்கான அழைப்பையும் கொடுத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

மேலும் உலகின் பல்வேறு பகுதிகளில் திருஅவையின் நீதிக்கான போராட்டங்களில் விடுதலைப் பயணம் நூல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. உதாரணமாக, தென் அமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளில் அரசியல் அடக்குமுறைகளுக்கு எதிராக உருவான விடுதலை இறையியல் விடுதலைப் பயணம் நிகழ்வுகளை மையமாகக் கொண்டுதான் உருவானது. பண்டைய இஸ்ரயேலின் அடிமைத்தனத்தையும் அதிலிருந்து அவர்கள் பெற்ற விடுதலையையும் எடுத்துக்காட்டாகக் கொண்டுதான் தென் அமெரிக்க நாடுகளின் வரலாற்றில் திருஅவை செயல்பட்டது. அங்கிருந்த அடக்குமுறைகளுக்கு எதிராகப் போரிட்டது. வடஅமெரிக்காவில் கறுப்பினத்தவர் நடத்திய போராட்டங்களுக்கும் விடுதலைப் பயணம் நூல் உத்வேகத்தைக் கொடுத்தது. விடுதலைப் பயணம் நூலை பல உட்பிரிவுகளைக் கொண்ட மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

01–எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்கள் (1:1–11:10)

1. இறைவெளிப்பாடும் விடுதலைத் திட்டமும் (1:1–7:7)
அ) அடிமைத்தன வாழ்வும் மோசேயின் பிறப்பும் வளர்ச்சியும் (1:1–2:22)
ஆ) மோசேயின் அழைப்பும் பணியும் (2:23–7:7)
2. வாழ்வும் சாவும்: இறையாற்றிலின் வெளிப்பாடு (7:8–11:10)

02–விடுதலை வாழ்வை நோக்கிய பயணம் (12:1–18:27)
1.விடியலின் ஆரம்பம் (12:1–15:21)
2.விடியலை நோக்கிய பயணம் (15:22–18:27)

03– சீனாய் மலையில் இஸ்ரயேல் மக்கள் (19:1–40:38)
1. வாழ்வைக் காட்டும் வழிமுறைகள் (19:1–24:18)
2. வாழ்வும் வழிபாடும் (25:1–31:18)
3. பாவமும் பரிகாரமும் (32:1–40:38)

பயணம் தொடரும்...

No one will be able to stand against you all the days of your life.
As I was with Moses, So I will be with you.
I will never leave you not forsake you.
Josua 1:5



# ஞாயிறு மறையுரை

## பொதுக்காலம் 22-ம் ஞாயிறு

28-08-2022

முதல் வாசகம் - சீராக்கின் ஞானம் 3:17-18, 20, 28-29
இரண்டாம் வாசகம் - எபிரேயர் 12:18-19, 22-24
நற்செய்தி வாசகம் - லூக்கா 14:1, 7-14


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஜஸ்டின் சேவியர் ராஜ்**
**பங்குத்தந்தை, திருக்குடும்ப ஆலயம்,**
**பெருந்துறை, கோயமுத்தூர்.**




ஒரு இராணுவ தளபதியுடைய மூன்று வயது மகள் மகிழ்ச்சியும் ஆற்றலும் ஒருங்கே பெற்றவள். இந்த இராணுவ தளபதி ஒழுங்குபடுத்துவதில் மிகவும் கண்டிப்பானவர். ஒருநாள் குழந்தையின் அளவுக்கு மீறிய குறும்பாலல் நொந்துபோன தாய் தன் கணவனிடம் புகார் செய்கிறாா். நீங்கள் பிரபலமான இராணுவ தளபதியாக இருந்து என்ன பயன். உங்கள் மகள் அதிகம் குறும்பு செய்து கீழ்படிவதில்லை. அவளுக்கு ஏன் சிறிது ஒழுக்கத்தைக் கற்றுத்தரக்கூடாது என்று முறையிட்டார். அந்த இராணுவ தளபதி இந்தப் புகாரைக் கவனமுடன் செவிமடுத்து தன் மகளை அழைத்து இன்றுமுதல் நீ கண்டிப்புடன் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்று கண்டிப்பாகச் சொன்னார். குழந்தையும் ஓகே டாடி என்றது. உடனே தந்தை என்னை டாடி என்று அழைக்கக்கூடாது. இனிமேல் என்னுடன் பேசும்போதெல்லாம் சார் என்று அழைத்து சார் என்று சொல்லித்தான் முடிக்க வேண்டும் என்றார். குழந்தையும் சார், சரி, சார் என்றது. தனக்கு ஐஸ்கிரீம் வேண்டும் என்றாலும், சார் எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும் சார் என்றுதான் அழைத்தது.

ஒருநாள் இந்த இராணுவ தளபதி கடைக்குச் செல்ல புறப்பட்டார். குழந்தையும் உடன் செல்ல விரும்பியது. தந்தையும், காரின் பின் இருக்கையில் உட்கார்ந்தால் அழைத்துச் செல்வதாகக் கூறினார். குழந்தையும் சம்மதித்து காரில் தந்தையுடன் சென்றது. பாதித் தொலைவுப் பயணத்தில் தளபதியின் கழுத்தில் அந்தப் பிஞ்சுக் கரங்கள் அனைத்துக் கொண்டு, சார், ஐ லவ் யூ சார் என்று சொல்வதை உணர்ந்தார். அந்த சிறுமிக்கு அவர் இராணுவத் தளபதி அல்ல, அப்பா. மனைவிக்குக் கணவன், சகோதரிக்கு அன்பான சகோதரன், அவருடைய பெற்றோருக்கு அவர் அன்பான மகன்.

அன்பார்ந்தவர்களே, வாழ்க்கையில் நாம் பல பல பாத்திரங்களில் நடிக்கிறோம். எல்லோரிடத்திலும் ஒரே வகையான பாத்திரத்தில் உறவாட முடியாது. ஆண்டின் பொதுக்காலத்தின் இருபத்திரண்டாம் வார ஞாயிறு வாசகங்கள் தாழ்ச்சி என்ற பண்பைக் கடைப்பிடித்து வாழ அழைக்கிறது.

முதல் வாசகம் சீராக்கின் ஞானநூல், இதயத்தில் அகந்தையற்றவனே, தாழ்ச்சியுடையவனே உண்மையான ஞானி என்கிறது. ஏழை எளிய மக்கள் இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்து வாழ்ந்ததால்தான் யாவேயின் மக்கள் என்று அழைக்கப்பட்டனர். இறைவன் எளியோரை நேரிய வழியில் நடத்துகின்றார். எளியோருக்குத் தமது வழியைக் கற்பிக்கின்றார் என்று நம்பினர். தான் என்ற ஆணவம் கொண்டவர், அனைத்தும் அறிந்தவன் நான் என்ற பேதமையில், பணத்தால் அனைத்தையும் சாதித்துவிடலாம் என்ற அகந்தை உள்ளவர்கள் இறைவனால் நிராகரிக்கப்படுவர்.

நற்செய்தி வாசகத்திலும் நாம் தாழ்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று இயேசு கற்பிக்கிறார்.பலருக்கு முன்பாக நம்மை பெரியவனாக, பெரியவளாக காட்டிக்கொள்ள விரும்பினால் இறைவனால் புறக்கணிக்கப்படுவோம் என்ற எச்சரிக்கை விடப்படுகிறது. ஆணவம் அழிவுக்கு முன் வரும் என்று எச்சரிக்கப்படுகின்றோம். அதுபோல அன்றாட வாழ்க்கையில் பணம் படைத்தவர்கள், பதவியில் இருப்பவர்கள், செல்வமும், செல்வாக்கும் உடையவர்கள் இவர்களை மதித்து முகவரி இழந்தவர்கள், ஏழைகள் போன்றவரை ஒதுக்கினால் நாம் இறைவனால் ஒதுக்கப்பட்டுவிடுவோம். எனவே, மனிதனை மனிதனாக மதிப்போம். மனிதநேயத்தைக் காப்போம்.

– ஆமென்

# பொதுக்காலத்தின் 22-ம் ஞாயிறு

சீஞா. 3:17-20, 28-29, எபி. 12:18-19, 22-24. லூக். 14:1,7-14



**28-08-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

பணிந்து நடந்து, தாழ்ச்சி உள்ளவராய் வாழ்ந்து, ஆண்டவரின் பரிவைப் பெற்று பேறு பெற்றவர்களாய் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 22-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு பணிந்து வரவேற்கிறேன்.

தாழ்ச்சி உடையோர் கடவுளால் உயர்த்தப்படுகின்றனர். அவர்கள் கடவுளின் மறை பொருளை அறிகின்றனர். அவர்கள் ஆண்டவரை மாட்சிப் படுத்துகின்றனர். அவர்கள் என்றும் வீழ்வதே இல்லை என்ற கருத்தை இன்றைய வழிபாடு மையமாகக் கொண்டுள்ளது.

சென்ற வாரம் குறுகலான பாதை வழியாக நிறைவாழ்வுக்கு வர அழைத்த இயேசு, இன்று தாழ்ச்சியோடு இருப்பவர்களே பெருமைப்படுத்தப்படுவார்கள். அவர்களுக்குத்தான் புதிய உடன்படிக்கையின்படி விண்ணரசில் இடம் அளிக்கப்படும் என்பதை தெளிவாக உணர்த்துகிறார்.

இறைவன் முன்பாக தாழ்ச்சியுடன் வாழ வேண்டும். பிற மனிதர்கள் முன்பாகப் பணிவோடு வாழ வேண்டும் என்ற இரண்டு முக்கியப் பண்புகளை நம் முன்பாக வைக்கிறது இன்றைய வாசகங்கள்.

விண்ணிலிருந்து கீழிறங்கும் மழை தான் மண்ணை வாழ வைக்கிறது. மலையிலிருந்து கீழிறங்கும் அருவி தான் மண்ணை வளப்படுத்துகிறது. தாழ்ச்சி எப்போதுமே வீழ்ச்சி அல்ல. அது உயர்ச்சி. ஆணவத்தால் வீழ்ச்சியுற்ற உலகைத் தன் தாழ்ச்சியால்தான் இயேசு உயர்த்தினார். இதோ ஆண்டவரின் அடிமை என தன்னையே தாழ்த்திய மரியாதான் உலக மீட்பிற்கு வித்திட்டார்.

தாழ்ச்சியோடு செயல்படுபவர்கள் கடவுளால் உயர்த்தப்படுகின்றனர். தாழ்ச்சி உள்ளவர்கள் வீழ்வதில்லை. தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை இயேசு ஒருபோதும் புறக்கணிப்பதில்லை. பணிந்த உள்ளமே பரமனுக்கு ஏற்ற உள்ளம் என்பதை மனதில் பதிவு செய்து கனிவும் மனத்தாழ்ச்சியும் உள்ளவராய் வாழ இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

ஞானத்தின் சிறப்பையும் அதன் இயல்பையும் பயனையும் எடுத்துரைத்து அகந்தையற்றவனும் தாழ்ச்சி உடையவனுமே உண்மையான ஞானி என்பதை விளக்குகிறது இன்றைய முதல் வாசகம். பணிவு, அடக்கம் ஆகியவை ஆண்டவரின் பரிவைத் தரும். இறுமாப்பு அழிவையே தரும் என்ற எச்சரிக்கையை தரும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

பழமைக்கும் புதுமைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறது இன்றைய இரண்டாம் வாசகம். இயேசுவை சீயோன் மலைக்கு ஒப்பிட்டு, அவரே உயிருள்ள விண்ணகம், அவரே அமைதியின் கடவுள், அவரே தாழ்ச்சியின் கடவுள் என்பதை விளக்கும் திருத்தூதர் பவுலின் கருத்தை கவனமுடன் கேட்போம்.

1) என்றென்றும் மாறாத பேரன்பு கொண்ட தந்தையே இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொது நிலையினர் அனைவரும் நாங்கள் இறைவனின் பணியாளர்கள், இப்பணி இறைவனுடையது என்று உம்மையே மையப்படுத்தி கனிவும் மனத்தாழ்ச்சியும் உள்ளவர்களாய் வாழ்ந்து திருச்சபையை சிறப்புற வழிநடத்தி செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) வாழ்வளிக்கும் வார்த்தைகளை வழங்கும் அன்பு இறைவா, தாவீதைப் போல், ஆயக்காரனைப்போல், மரியாளைப்போல் எல்லாவற்றிற்கும் மேலாக உம் திருமகன் ஆண்டவர் இயேசுவைப் போல் நாங்களும் தாழ்ச்சியுடைய மக்களாக வாழ அருள்தாரும். எங்களிடம் இருக்கின்ற ஆணவம், அகங்காரம், இறுமாப்பு, கர்வம் ஆகியவற்றை அடியோடு அகற்றி, ஆண்டவராகிய நீரே எமக்கு எல்லாம் என்பதை எம் நெஞ்சில் நிறுத்தி கனிவும் மனத்தாழ்ச்சியும் உள்ளவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) நொறுங்கிய மனத்தாரோடும், நலிந்த நெஞ்சத்தினரோடும் வாழ்கின்ற அன்பு இறைவா, செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார். தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ, கருணை காட்டுவார் என்பதை நம்பிக்கையுடன் ஏற்று நாங்கள் ஒருவர் மற்றவரோடு பழகும்போது மனத் தாழ்மையை ஆடையாய் அணிந்து, நொறுங்கிய உள்ளத்தினரை ஊக்குவித்து, நலிந்த நெஞ்சத்தினரைத் திடப்படுத்தி வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) நம்பிக்கையின் நாயகனே இறைவா, எம் நாட்டுத் தலைவர்கள் தொண்டு உள்ளம் கொண்டு அனைத்து மக்களையும் சமமாக நடத்தி, அவர்களின் தேவைகளை அறிந்து அதற்கானத் திட்டங்களை நிறைவேற்றி, சமச்சீர் கல்வியைத் தந்து வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி உம்மைப்போல கனிவுடன் பணி செய்து நல்லாட்சிப் புரிந்திடத் தேவையான ஞானத்தை அவர்கள் மேல் நிறைவாய் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



பத்தியாய்ச் செபம் பண்ணவே
சுத்தமாய் தெரியாதையா
புத்தியோடு உமைப் போற்ற நல்
சித்தம் ஈந்திடும் யேசுவே

*இயேசு பெருமானே! உம் அருள் வேண்டுவது எப்படி என்று அறியாமல் இருக்கிறேன். நான் நல்லறியோடு உம்மை வாழ்த்திப் புகழும் வண்ணம் நீர் நல்ல மனத்தைத் தந்தருள வேண்டும்.*



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் –8

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது**

### குறள் விளக்கம்

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது.

### சிந்தனை

அறக்கடலாகிய இறைவனின் தாள் பணிந்தவர்கள் மட்டுமே இன்பமும், பொருளும் அடைய முடியும் என்கிறார் வள்ளுவர். துன்பம், கவலைகள் இடைமறித்தாலும் அதிலும் இறைத்துணையால் உறுதி பெற்று அதிலிருந்து மீண்டு எழுந்து இன்பமும் பொருளும் பெற்று நிறைவாக வாழ்வர்.

தாமஸ் ஆல்வா எடிசன் ஆய்வகத்தில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டது. விபத்து ஏற்பட வாய்ப்பில்லாத அளவுக்கு அவர் அந்த ஆய்வகத்தை அமைத்;திருந்தார். அதை மிகவும் குறைவான தொகைக்குத்தான் காப்பீடு செய்திருந்தார். இரண்டு மில்லியன் டாலர் அளவுக்கு அவருடைய சொத்துக்களும், அவருடைய பல ஆய்வுக் குறிப்புகளும், பல்வேறு நிலையிலிருந்த ஆராய்ச்சிப் பொருட்களும் தீக்கு இரையாயின. ஆனால் எடிசன் மிகவும் அமைதியாக அதைக் கவனித்துக் கொண்டிருப்பதை அவருடைய மகன் சார்லஸ் பார்த்துக் கொண்டிருந்தான். எடிசன், சார்லஸ்! உன் அம்மா எங்கே? அவளையும் அழைத்து வா. அவள் இதுபோன்ற ஒரு காட்சியை வாழ்நாளில் இன்னொரு முறை பார்க்க முடியாது. அடுத்த நாள் அந்த அழிவுகளையெல்லாம் முழுமையாகப் பார்வையிட்ட எடிசன் இந்த விபத்தினால் ஒரு பெரிய நன்மை உண்டு. நம்முடைய தவறுகளையும் அது அழித்து விட்டது. நாம் புதிதாக மறுபடியும் ஆரம்பிக்க வாய்ப்பு கிடைத்ததற்காக இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்த விபத்து நடந்த மூன்றே வாரங்களில் அவர் ஃபோனோகிராஃப் ஐக் கண்டுபிடித்தார்.

ஆத்திகாரரான எடிசன் அழிவை பார்த்து சோர்ந்து போகவில்லை. இறைவனுக்கு அந்த சமயத்திலும் நன்றி சொன்னார். இழப்புகள் நம் தவறுகளை அழித்து விடுகின்றன. புதிய துவக்கத்தை ஏறெடுக்க வாய்ப்புகளை ஏற்படுத்தி தருகின்றன என்று நம்பினார். அதனால் தான் ஆய்வக விபத்து நடந்த மூன்றே வாரங்களில் அவரால் புதிய கண்டுபிடிப்பை உருவாக்க முடிந்தது.

எனக்கு துன்பம்; விளைந்தது என் நன்மைக்காகவே: அதனால், உம் விதிமுறைகளை நான் கற்றுக் கொண்டேன். –திபா 119:71

என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். இறைநம்பிக்கையாளர் சோதனைகள் கடவுளிடமிருந்து வருகிறது என்றே கருதுகிறார். அந்த துன்பத்தை கடவுள் தனக்கு அனுமதித்ததற்கு ஒரு காரணம் இருக்கும் என்ற நம்பிக்கையில் அதனை கடந்துவர உத்வேகமும் பெறுகிறார். அவரது முயற்சியில் இறைவனும் அவருக்கு முழுமையாக துணை நிற்கிறார்.

இறைவனின் துணையோடு துன்பமாகிய பிறவிப் பெருங்கடலை கடந்தவர் எத்தகைய துன்பக் கடலையும் துணிவோடு எளிதில் கடப்பர். நிலையான இன்பம் பெற இறைவன் தாள் பணிவோம்.



# வத்திக்கான் செய்திகள்

பாதுகாக்கப்பட்ட காடுகள், பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களைச் சுற்றி வரவிருக்கும் உத்தேச இடையக மண்டலங்கள் தொடர்பான மக்களின் கவலைகளை நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு தென்னிந்திய மாநிலமான கேரள அரசிடம் கத்தோலிக்க ஆயர்கள் நினைவூட்டியுள்ளனர்.


ஜூன் 3 அன்று இந்திய உச்ச நீதிமன்றம் நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட காடுகள். தேசியப் பூங்கா மற்றும் வனவிலங்கு சரணாலயத்தின் வரையறுக்கப்பட்ட எல்லைகளில் குறைந்தபட்சம் ஒரு கிலோமீட்டருக்கு சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களை அமைப்பது கட்டாயமாக்கியது. அவைகளில் அனைத்து மனித நடவடிக்கைகளையும் அகற்ற வேண்டும் என்ற உத்தரவுக்கு தங்கள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு நீதிமன்றம் மூன்று மாதங்கள் அவகாசம் அளித்துள்ளது.

கேரளாவிற்குள் ஒரு மில்லியன் மக்கள் உணர்திறன் மண்டலங்களை அமைப்பதற்காக கையகப்படுத்தப்படக்கூடிய பகுதிகளில் வாழ்கிறார்கள் மற்றும் கம்யூனிஸ்ட் தலைமையிலான மாகாண அரசாங்கம் அவர்கள் மீதான புள்ளிவிவரத் தரவுகளை சேகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளியேற்றத்தை எதிர்கொள்பவர்களில் ஆயிரக்கணக்கானோர் கத்தோலிக்கர்கள் பல மறைமாவட்டங்களில், குறிப்பாக கேரளாவின் மலைப்பாங்கான மாவட்டங்களில் உள்ளனர். காடுகளில் வசிக்கும் சமூகங்களின் கவலைகளை ஆய்வு செய்ய வனத்துறைக்கு அரசாங்கம் உத்தரவிட்டது. ஆனால் பெரிய அளவிலான இடப்பெயர்ச்சியின் உண்மையான பிரச்சினைக்கு தீர்வு காண எந்த முயற்சியும் சிறிதும் செய்யவில்லை என்று பிஷப் புலிக்கல் கூறினார்.

ஹிமாசலப்பிரதேசத்தை ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் அரசாங்கம் ஏற்கெனவே, மதமாற்றத் தடைச் சட்டத்தை அமல்படுத்தி வருகின்றது. மேலும் 2022ம் வருடம் ஆகஸ்ட் 13ம் தேதி மற்றொரு சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி குழுவாக மத மாற்றத்திற்கு தடை என்று அது அறிவித்துள்ளது. அதாவது இரண்டு பேருக்குமேல் ஒரே சமயத்தில் மதமாற்றம் செய்தால், அவர்களுக்கு எழுமுதல் பத்து வருடம் சிறை தண்டனை வழங்கப்படும் என்று அது எச்சரிக்கின்றது. எதிர் வரும் தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெற இப்படியான சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆகஸ்ட் 15 அன்று கிசாவில் உள்ள அபு செஃபைன் காப்டிக் ஆர்த்தடாக்ஸ் தேவாலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 41 பேர் உயிரிழந்தனர். சர்ச் மற்றும் அரசாங்க அதிகாரிகள் இருவரும் தீ விபத்து தற்செயலானது என்று நம்புகிறார்கள்; ஏர் கண்டிஷனரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக எகிப்து உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 22-ம் ஞாயிறு - 28.08.22

### 28.08.2022 – ஞாயிற்றுக்கிழமை

முதல் வாசகம் : சீராக்கின் ஞானம் 3:17-18, 20, 28-29
இரண்டாம் வாசகம் : எபிரேயரர் 12:18-19, 22-24
நற்செய்தி : லூக்கா : லூக்கா 14:1, 7-14

### 29.08.2022 – புதன்கிழமை

**முதல் வாசகம்** : 1 கொரிந்தியர் 2:1-5
**நற்செய்தி** : லூக்கா 4:16-30

### 30.08.2022 – செவ்வாய்கிழமை

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 2:10-16
நற்செய்தி : லூக்கா 4:31-37

### 31.08.2022 – புதன்கிழமை

**முதல் வாசகம்** : 1 கொரிந்தியர் 3:1-9
**நற்செய்தி** : லூக்கா 4:38-44

### 01.09.2022 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 3:18-23
நற்செய்தி : லூக்கா 5:1-11

### 02.09.2022 – வெள்ளிக்கிழமை

**முதல் வாசகம்** : 1 கொரிந்தியர் 4:1-5
**நற்செய்தி** : லூக்கா 5:33-39

### 03.09.2022 – சனிக்கிழமை

முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 4:6-15
நற்செய்தி : லூக்கா 6:1-5



In Every
YOUNG PERSON,
a point of
GOODNESS
is
ACCESSIBLE
and it is the
primary duty
of the educator
to discover that
sensitive
cord of the heart
so as to draw out
the best in the
young person.


Don Bosco



# திருவிவிலியமும் திருக்குறளும்

## வழங்கும்

# ஆன்மீகச் சிந்தனை




**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.**

அதிகாரம் 15

பிறனில் விழையாமை

குறள் - 148

**பொருள்:** பிறனுடைய மனைவியை விரும்பி நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறம் மட்டுமன்று; நிறைந்த ஒழுக்கமும் ஆகும். பேராண்மை எனப்படுவது பகைக்கு அஞ்சாத வீரமாகும். ஆனால் அதே பகைவர்க்கு ஒரு துன்பமான நேரத்தில் பகை என்று பாராமல் அவருக்கு உதவுவதே நல்ல பண்பாகும். நல்ல ஆளும் தன்மை ஆகும். வீரத்திலும் பகைவருக்கு துன்ப நேரத்தில் உதவுவதே அந்த வீரத்தின் சிறப்பு என பேராண்மையைப் பற்றி கூறப்படுகிறது. இதனோடு கூட பிறன் மனைவியை விரும்பாமல் இருத்தலும் சிறந்த பேராண்மை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

பண்டைய காலத்தில் கல்வியைப் பெற விரும்புகிறவர்கள் தனது ஐந்து வயது அளவில் பெற்றோர் உறவினர்களை பிரிந்து குருகுலம் சென்று குருகுலக் கல்வியைப் பெற்றனர். அங்கு குரு தந்தையாகவும் குரு மாதா தாயாகவும் இருந்து அவர்களை வழி நடத்துவார்கள். அங்கு குருவால் அனைவருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி கல்வி போதிக்கப்படும்.

அக்காலத்தில் ஒழுக்க கல்வியே சிறப்பாக போதிக்கப்பட்டது. அதன் மூலம் மாணவர்கள் உலக அறிவோடு சேர்ந்து விழுமியக் கல்வியையும் சிறப்பாக கற்றனர். இங்கு குருவை மதித்தல் குருவிற்கு பணிவிடை செய்தல், சகோதரத்துவம், பகிர்ந்துண்ணல், சத்தியம், உண்மை, நீதி போன்ற விழுமியப் பண்புகள் வளர்க்கப்பட்டன.

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்

என்று திருமந்திரப் பாடல் கூறுகிறது.

மேலும் உடலின் அமைப்பை வைத்தே - உடலின் பிரதியாகவே - மக்கள் கோவில்களை எழுப்பி வந்தார்கள். மூலாதாரம் வாயில் என்கால் நெற்றி இறைவனின் திருவுரு இருக்கும் கருவறை. இடையே நாடியின் ஆறு சக்கரங்களைப் போன்று ஆலயத்தில் ஆறு பகுதிகள். இவ்வாறு உடல் கோவிலாக உருவாகிக்கப்பட்டது; அதேபோன்று கோவிலும் உடலாக உருவகிக்கப்பட்டது.

கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் அடையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு என்று உரோமையருக்கு எழுதிய நிருபத்தில் அதிகாரம் 12:1

ஆம் இறைவசனத்தில் பவுல் கூறுகிறார்.

நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில். எவரும் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். இவ்வுலகில் தங்களை ஞானிகள் என்று கருதிக் கொள்வோர் தாங்களே மடையராகட்டும். அப்போது அவர்கள் ஞானிகள் ஆவார்கள். - (1 கொரிந்தியர் 3:16-18)

கிரேக்க அறிஞர் சிலரின் கருத்துப்படி பாலுறவு மனிதரின் இன்றியமையாத் தேவை ஆகும். எனவே ஒழுக்க நெறிகளுக்கு அது உட்பட்டது அன்று. தாகம் ஏற்பட்டவுடன் எவ்வாறு ஒருவர் தண்ணீர் அருந்துகிறாரோ அதேபோன்று பாலுணர்வு மேலிட்டவர் அதை எந்த வழியிலும் தணித்துக் கொள்ளலாம் என்று அவர்கள் கூறி வந்தார்கள். இத்தகைய மனப்பான்மை மக்கள் நடுவில் பரவலாக இருந்ததால்தான் கிரேக்க நகரங்களில் ஒழுக்கக்கேடு தலைவிரித்து தாண்டவமாடியது. பெரும் துறைமுக நகராகிய கொரிந்திலும் ஒழுக்கம் மிகவும் சீர்குலைந்து போனது. கூடா ஒழுக்கம்,

பரத்தமை முதலான கெட்ட நடத்தையும் பெருமளவில் அங்குக் காணப்பட்டன. அதனால்தான் பவுல்

உடலின் இச்சைகளுக்கு உங்களைக் கீழ்ப்படிய செய்யும் பாவம் சாவுக்குரிய உங்கள் உடலின் மீது ஆட்சி செலுத்த விடாதீர்கள். நீங்களோ உங்கள் உறுப்புகளைத் தீவினையின் கருவிகளாக பாவத்திற்கு ஒப்புவிக்காதீர்கள். மாறாக இறந்தும் வாழ்வோராய் உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள். கடவுளுக்கு ஏற்புடையவைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள். பாவம் உங்கள் மீது ஆட்சி செலுத்தக் கூடாது என்று உரோமருக்கு எழுதின நிருபத்தில் ஆறாம் அதிகாரம் இறைவசனம் 12 முதல் 14 வரை உள்ள வசனங்களில் கூறுகிறார்.

இறை அரசை பொருத்தமட்டில் கெட்ட நடத்தைதான் பாவங்களிலேயே மிகப் பெரிய பாவம். அதனால்தான் கெட்ட நடத்தையில் ஈடுபடுவோருக்கு இறை ஆட்சியில் பங்கு கிடையாது என்பதை எபேசியர் புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம்.

பரத்தமையில் ஈடுபடுவோர், ஒழுக்கக்கேடாக நடப்போர், சிலைவழிபாடாகிய பேராசை கொண்டோர் போன்ற எவரும் கிறிஸ்துவுக்கும் கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப் பேறு அடையார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். (எபேசி.5:5)

பொதுவாக அடிமைகளின் நிலைமையில் மாற்றம் ஏற்படுகிறது. முந்திய தலைவர்களிடமிருந்து விடுதலை பெற்ற அடிமைகள் புதிய தலைவராம் கிறிஸ்துவுக்கு இப்போது சொந்தம். ஆகவே அவர்களுடைய நடத்தையில் நடைமுறை வாழ்வில் மாற்றம் ஏற்பட வேண்டும். கெட்ட நடத்தைக்கு தங்களது உடல்களை எவரும் கையளிக்க கூடாது. மாறாக கடவுளை மாட்சிமைப் படுத்த வேண்டும். கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ நினைப்பவர்கள் உடலால் கடவுளுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்பதை என்றுமே மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர் தமது உடல் என்னும் கோவிலில் வழிபாடு நிகழ்த்தும் குரு ஆவார். அந்த பீட முற்றத்தில் அவர் கடவுளுக்கு ஊழியம் புரிகிறார். அதன் புனிதத்தை களங்கப்படுத்தும் அனைத்தினின்றும் விலகி நிற்கிறார்

என்கிறார் அறிஞர் எல்.செர்பா.

ஆண்டவருடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டு வாழும் நாம் ஒவ்வொருவரும் இறைவனுக்கு ஏற்ற சிறந்த போர்வீரர்களாகஇ சிறந்த போர் வீராங்கனைகளாக எவ்வாறு வாழ வேண்டும் என்பதை எபேசியர் 6 ஆம் அதிகாரத்தில் 14ஆம் வசனம் முதல் கூறுகிறது.

ஏனென்றால் நாம் மனிதர்களோடு மட்டும் போராடுவதில்லை. ஆட்சிபுரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின்மீது ஆற்றல் உடையோர், வான்வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடும் போராடுகிறோம். எனவே பொல்லாத நாள் வரும்போது, எதிர்த்து நின்று, அனைத்தின் மீதும் வெற்றிபெற்று நிலைநிற்க வல்லமை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். ஆகையால் உண்மையை இடைக்கச்சையாகக் கட்டிக் கொண்டு நீதியை மார்புக்கவசமாக அணிந்து நில்லுங்கள்; அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள். எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்துவிட முடியும். மீட்பைத் தலைச்சீராவாகவும், கடவுளின் வார்த்தையைத் தூய ஆவி அருளும் போர்வாளாகவும் எடுத்துக் கொள்ளுங்கள்.

இவ்வசனங்களை அனுதினமும் கூறி தூய ஆவியாரின் துணையோடு கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ்வோம்.

*இயேசுவுக்கே புகழ்*

**– லீமா விக்டோரியா**

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்